Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 20 ஏப்ரல் 2015 கானம் : 9




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar



ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 20 | ஏப்ரல் 2015 | கானம் : 9

Delivered by India Post www.indiapost.gov.in



பிப்ரவரி 21 – 23 குர்கான் ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திராவில் ஐந்தாவது வருட பூர்த்தியை ஒட்டி சத்சங்கம்
- பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்



மார்ச் 5 கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் ஜகன்னாதர் ரத உற்ஸவம்





மார்ச் 6 – 8 தூத்துக்குடி நாமத்வார் மற்றும் அபிராமி மஹாலில்



மார்ச்1 ஸ்டார் விஜய் டிவி பக்தி திருவிழா துவக்கம் சென்னை நாரத கான சபா
- ஸ்டார் விஜய் டிவி Channel Head திரு.ஸ்ரீராம் மற்றும் ஸ்டார் விஜய் டிவி Sr Exec Producer- திரு.நாவண்ணன் அவர்களுடன்





மார்ச் 14 விருதுநகர் தனசாமி-பரிமளாதேவி முதியோர் இல்லத்தில்



மார்ச் 3 பாண்டிச்சேரி ஸ்ரீவிவேகானந்தா ரூரல் கம்யூனிட்டி கல்லூரி வளாகத்தில்





மார்ச் 9 – 11 – சிவகாசி நாமத்வார் மற்றும் மாஸ்டர் பிரிண்டர்ஸ் அஸோசியேஷன் ஹாலில்



மார்ச் 12 – 14தேதிகளில் விருதுநகர் நாமத்வார் மற்றும் SS சரஸ்வதி மஹாலில்



மார்ச் சத்சங்கங்கள்
6 – 8 தூத்துக்குடி அபிராமி மஹால்
9 – 11 சிவகாசி மாஸ்டர் பிரிண்டர் அஸோசியேஷன் ஹால்
12 – 14 விருதுநகர் SS சரஸ்வதி மஹால்

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 ஏப்ரல் 2015 கானம்: 9

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-229 | 05 | வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 10 | சனாதன கோஸ்வாமி | 26 |
| பாகவத பழம்- ஸ்க 2/23 | 12 | பாலகர்களுக்கு ஒரு கதை | 28 |
| எதையும் துறக்கவில்லை | 15 | ப்ருந்தாவன கண்ணன் | 32 |
| விபுல தேவர் | 17 | மாலே மணிவண்ணா | 34 |


கோவிலின் முக்கிய பகுதி, கருவறையின் மேலுள்ள விமானம். அது சதுரமாக இருந்தால் "நாகரம்" என்றும், வட்டமாக இருந்தால் "வேசரம்" என்றும், ஆறு அல்லது எட்டு பட்டை இருந்தால் "திராவிடம்" என்றும், 'சில்பரத்தினம்' 'மானசாரம்' போன்ற சிற்ப நூல்கள் வகைப்படுத்தியுள்ளன. "நாகரம்" நாட்டின் வடபகுதியிலும், "திராவிடம்" தென்பகுதியிலும், "வேசரம்" இடைப்பகுதியிலும் காணப்படுவனவாக சாத்திரங்கள் கூறியுள்ள போதிலும், தென்னகத்திலேயே மூன்று வகைகளையும் காணலாம். நெல்லைப்பகுதியிலுள்ள ஒரு கோவிலில் 'நாகர' அமைப்பையும், கங்கை கொண்ட சோளேச்சரத்தில் 'வேசர' அமைப்பையும், தஞ்சை பெரிய கோவிலில் 'திராவிட' அமைப்பையும் காணலாம்.

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: சஹானா  தாளம்: ஆதி

பல்லவி

உன் க்ருபையின்றி வேறு ஒன்றும் கண்டிலேன்
எங்கும் எதிலும் எப்பொழுதும் - கண்ணா

(உன் க்ருபையின்றி ...)

அனுபல்லவி

வேதனையோ சோதனையோ ஸுகமோ துக்கமோ
அதுவும் உன் க்ருபையே என்று உணர வைத்தது
க்ருபையில் எல்லாம் அரிய க்ருபை அன்றோ!

(உன் க்ருபையின்றி ...)

சரணம்

உள்ளே ஒளிந்திருக்கும் நீ ஒரு
மினுக்கு மினுக்கினால் போதுமே!
வெளி விஷயங்கள் எல்லாம் எனக்கு
ஆதவன் முன் சந்திரன் போல் ஆயிடுமே!

(உன் க்ருபையின்றி ...)



முன் அட்டை: திருமங்கலக்குடி கணநாதன் கோவிலில் மார்ச் 6, 2015 அன்று ஸ்ரீஸ்வாமிஜி

பின் அட்டை: சிவகாசி மாஸ்டர் பிரிண்டர் அஸோஸியேஷன் ஹாலில் சத்சங்கம், மார்ச் 9-11, 2015

# மதுரமான மஹநீயர் - 229

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

சமீபத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய மதுர கீதங்களில் "கோவிந்தனுக்காட்பட்ட குடும்பம்மா எங்கள் குடும்பம்" எனும் கீர்த்தனம், பட்டி-தொட்டிகளில் உள்ளோரும் பாடி மகிழும் ஒன்றாகும். இதில் பாகவதம் சொல்லும் தர்மங்களை, குருநாதர் எளிய முறையில் அருளி உள்ளார்கள். உதாரணமாக "*கள்ளமில்லா பாகவத தர்மத்திலே ..*" எனும் *வரிகள் "தர்ம ப்ரோஜ்ஜித கைதவோऽத்ர ...*" என பாகவதத்தை ஒட்டி வருகின்றது. சத்சங்கத்தில் உள்ள பல குடும்பங்களை அழகாக, இந்த பாகவத தர்மத்திலே இருக்க, குருநாதர் அருளி வருகிறார்கள். திரு.தியாகராஜனின் குடும்பமும் அதில் ஒன்று.

அவர் ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தில், பல வெளிநாடுகளில் வேலை பார்த்து வந்தவர். சாதுக்கள் மற்றும் மஹான்களிடம், மிகவும் மதிப்பும் மரியாதையும் கொண்டது அவர் குடும்பம். அவர் மனைவி ஸ்ரீமதி சுதா. குழந்தைகள் நிர்மல், ஈஸ்வர் என்ற இருவர். அமெரிக்கா டல்லஸில் இருக்கையில் பூர்ணிமாஜியின் சத்சங்கங்களில் கலந்துகொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி பற்றி கேள்விப்பட்டது முதல், ஸ்ரீஸ்வாமிஜியை தரிசிக்க மிகுந்த ஆசை கொண்டார் திரு.தியாகராஜன். அதற்கு பல வருடம் முன்பே, அவர் தந்தை திரு.ஸ்வாமிநாதய்யரும், அண்ணா திரு.ராமகிருஷ்ணனும் குருநாதரை மதுரையில் தரிசனம் செய்திருந்தனர்.

**2010** பிப்ரவரியில் இந்தியாவிற்கு வந்த தியாகராஜன் ஸ்ரீஸ்வாமிஜியை எர்ணாகுளம் நாமத்வாரில் முதன் முதலில் தரிசித்தார். தமக்கே உரிய கனிவான அன்புடன், குருநாதர், அவரை பற்றி விசாரிக்க, தியாகராஜன் உருகிவிட்டார். தாம் இந்தியா வர ஆசைப்படுவதாக, குருநாதரிடம் சொன்னார் அவர். "எதற்காக இந்தியா வர வேண்டும்? அமெரிக்காவில் இருந்தவாறே, இனிமையாக நாமம் சொல்லிக்கொண்டு இருக்கலாமே" என்றார் ஸ்ரீஸ்வாமிஜி. "குழந்தைகள் இந்திய மண்ணில் வளர வேண்டும் என ஆசைப்படுகிறேன்" என தியாகராஜன் பதில் சொல்லவே, ஸ்ரீஸ்வாமிஜி சந்தோஷப்பட்டு, "அப்படி எனில் இந்தியா வா" என்று அனுமதி தந்தார்கள்.

மஹான்களின் சம்மதத்தை பெற்றுக்கொண்டு, செய்யும் எந்தவொரு காரியமும், மிக நன்றாக நடக்கும். தியாகராஜன் குருநாதரின் அனுமதி பெற்றபின், அமெரிக்கா சென்று, வேலையில் 'இந்தியாவுக்கு மாற்றல் கொடுங்கள்' என விண்ணப்பம் கொடுத்து விட்டு இந்தியாவிற்கு கிளம்பினார். இந்தியாவிற்கு மாற்றல் கிடைக்கும் என்பது அன்று நிச்சயம் இல்லை. ஆனால், விரைவில் தியாகராஜன் விருப்பப்படியே கிடைத்தது. சாமான்களை பேக் செய்து, இந்தியாவில் டோர் டெலிவரி செய்வது வரை, எல்லாம் நண்பர் ஒருவர் முழுவதும் பார்த்துக்கொண்டு விட்டார். வந்தபின் சென்னையிலோ, சிறிதும் சிரமமில்லாமல் குழந்தைகளுக்கு பள்ளியில் இடமும் கிடைத்தது.

சென்னைக்கு மே மாதம் வந்தவர், ஏர்போர்ட்டில் தாம் வந்த டாக்ஸியில், ஒட்டி இருந்த மஹாமந்திரத்தை முதலில் பார்த்தார். டாக்ஸி டிரைவரும் தாம் திண்டுக்கல்லை சேர்ந்தவர் என்றும், தாம் ஸ்ரீஸ்வாமிஜியை தரிசித்திருப்பதாகவும் சொல்லி, வீடு வரும் வரை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை பற்றியே பேசிக்கொண்டு வந்தார். திரு.தியாகராஜனுக்கு இது, "எல்லாம் நல்லபடியே நடக்கிறது" என குருநாதர் சொல்வதாக தோன்றியது. அவருக்கு மிக்க மகிழ்ச்சி.

சில நாட்களில், ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜியை, தியாகராஜன் குடும்பத்தார் அனைவரும் தரிசித்து அவருடன் பேசி மகிழ்ந்தனர். ஜூன் மாதம் வரை, அவருக்கு வேலை மாற்றல் உத்திரவு வரவில்லை. வேறு வேலை தேடலாமா என ஸ்ரீஸ்வாமிஜியை அவர் கேட்க, ஸ்ரீஸ்வாமிஜியோ, "அவசியம் இல்லை. ஒரு வாரத்தில் ஆர்டர் வந்து விடும் பார்" என்றார்கள். அப்படியே மாற்றல் ஆர்டரும் வந்தது. ஜூலை மாதம் வேலையில் சேரவும் செய்தார் அவர்.

மே மாதமே அவர் தன் பையன் நிர்மலுக்கு, மதுரை காஞ்சி மடத்தில் உபநயனம் செய்வித்தார். உபநயனத்திற்கு சில தினம் முன், செய்து வைக்க இருந்த வாத்யார் குடும்பத்தில் பெரிய கஷ்டம் ஏற்பட்டது. அதனால் உபநயனம் நன்கு நடக்க வேண்டுமே என்ற கவலையுடன் குருநாதரை அணுகினார் தியாகராஜன். ஸ்ரீஸ்வாமிஜி, "கவலை வேண்டாம்; நல்லபடியாக நடக்கும்" என்று சொல்லி அருளியதோடு மட்டுமல்லாமல், பிரசாதமும் ஒரு அன்பர் மூலமாக கொடுத்தனுப்பினார். உபநயனமும் நன்கு நடந்தது. இரு வருடங்கள் கழித்து, தன்

அடுத்த பையன் ஈஸ்வருக்கும், மதுரை காஞ்சி மடத்திலேயே உபநயனம் செய்வித்தார் தியாகராஜன். இம்முறை அந்த வாத்யாருக்கு, நாலு நாள் முன்பாக, பெரிய விபத்து ஏற்பட்டு விட்டது. உடனே, குருநாதரிடம் கவலையுடன் விஷயத்தை சொல்லி பிரார்த்தித்தார் தியாகராஜன். அப்பொழுது திருவனந்தபுர பாகவத சப்தாஹத்தில் இருந்த குருநாதர், அது முடிந்த கையுடன், நேரே மதுரை வந்தார்கள். மதுரை நாமத்வாரில் தியாகராஜன் குருநாதரை தரிசிக்கையில், "உபநயனம் செய்து வைக்க யாரும் இல்லை என கவலை வேண்டாம். நானே ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி, தாமாகவே ஒருவரை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். மேலும் அன்று குருநாதர் தியாகராஜனிடம், எப்படி சத்சங்கமாக குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்பது முதலான, பல விஷயங்களை, வெகுநேரம் பேசி, உபதேசித்து அருளினார்கள்.

பரம்பரையாக ராதா கல்யாணம், சீதா கல்யாணம், பாராயணங்கள் போன்ற சத்சங்கங்களை சம்பிரதாயத்துடன் நடத்தி வரும் குடும்பங்கள், காலப்போக்கில் அதை சுருக்காமல், விமரிசையாகவே நடத்த வேண்டும் என்பதில், மிகவும் கருத்து கொண்டிருப்பார் ஸ்ரீஸ்வாமிஜி. திரு.தியாகராஜனின் குடும்பம், மன்னார்குடியை சேர்ந்தது. அங்கு, அவர் முன்னோர் 1962 முதல் ஸ்ரீராம நவமி உற்ஸவம் கொண்டாடி வருகின்றனர். பத்து நாள் விமரிசையாக கொண்டாடியது, காலப்போக்கில் மூன்று நாளாக ஆகி விட்டது. ஸ்ரீஸ்வாமிஜிதான், இதை மறுபடி பத்து நாள் உற்சவமாக மாற்றி, நடைபெற அருளி வருகிறார்கள்!!

குருநாதர் அருள் பெற்றால், கஷ்டமென்று எதுவும் இருக்காது. திருவான்மியூரில் ஒரு வீடு வாங்க, குருநாதரிடம், தியாகராஜன் அனுமதி பெற்றிருந்தார். பெரிய வீடு ஒன்று விலைக்கு வந்தது. வீட்டு உரிமையாளர், தன் பையனுக்காக அழகாக கட்டி இருந்தார். பையனோ வெளியூரிலிருந்ததால், விற்க முன் வந்தார். தியாகராஜன் அவரை போய் பார்த்தார். ஸ்ரீஸ்வாமிஜியின் சத்சங்கத்தை சேர்ந்தவர் என தெரிந்தவுடன், முதலில் தம் வீட்டில் சத்சங்கமும் நாமகீர்த்தனமும் வைத்து கொள்ள மிகவும் ஆசைப்பட்டார் அந்த வீட்டு உரிமையாளர்! மேலும், என்ன விலைக்கு வாங்கலாம் என தியாகராஜன் எதிர்பார்த்தாரோ, அந்த குறைந்த விலைக்கே கொடுக்கவும் செய்தார். ஒருவரும் பேரம் பேசவே இல்லை!!

மன்னார்குடி என்றால் ராஜகோபாலஸ்வாமி நினைவுதானே வருகிறது. வீட்டிற்கு பெயர் வேண்டும் என தியாகராஜன் கேட்டபொழுது, "உங்கள் குடும்பம் மன்னார்குடி ராஜகோபாலனை சேர்ந்தது. அவன் பெயர்தான் உங்கள் வீட்டிற்கு இருக்க வேண்டும்" ஸ்ரீஸ்வாமிஜி அருளினார்கள். மேலும், தஞ்சாவூர் **painting** ஸ்ரீகிருஷ்ணன் போல ஒரு அழகிய ஓவியம் வரைய செய்து, அதை அவர் வீட்டில் மாட்ட சொன்னார். 'ராஜகோபாலன் இல்லம்' என பெயர் வைத்தார்கள். கிரஹப்ரவேசமும் நன்றாக நடைபெற்றது. வீட்டின் முகவரியை பார்த்தால், பாகவதம், ராமாயணம், ராமன், கிருஷ்ணன் என வீடு, தெரு, நகர் என்று எல்லாவற்றிலும் இருக்கும்!!

**2014** ஆவணி அவிட்டத்தன்று ப்ரேமிக பவனத்தில், தியாகராஜனின் அப்பாவை ஸ்ரீஸ்வாமிஜி திடீரென தொட்டு, "நீங்கள் நன்றாக இருப்பீர்கள். கவலை வேண்டாம்" என்றார்கள். எதற்கு அப்படி சொல்கிறார் என அப்பொழுது புரியவில்லை! மறுநாள் ஸ்ரீஸ்வாமிஜி, "அப்பாவை தொட்டு பார்த்தேன். அவருக்கு உடம்பு சரி இல்லை. அவர் அலைய வேண்டாம். மெட்ராசிலோ மதுரையிலோ இருக்கட்டும்" என்று செய்தி சொல்லி அனுப்பினார்கள். தியாகராஜனின் அப்பா, சில தினங்கள் கழித்து மதுரைக்கு கிளம்பினார். போகும் வழியில் பஸ்ஸிலேயே அவருக்கு மயக்கம் வந்து நினைவிழந்தார். தியாகராஜன் அவசரமாக சென்று பெற்றோரை கூட்டி வந்தார். ஒரு மாதம் கழித்து, மீண்டும் மதுரை கிளம்பினார் தந்தை. சில நாட்களில், அப்பாவிற்கு கான்சர் வந்திருக்கிறது என ரிப்போர்ட் வந்தது. ஸ்ரீஸ்வாமிஜியிடம் தெரிவிக்க, "அலையக் கூடாதென சொன்னேனே" என்ற அவர், சற்றும் தாமதியாது சென்னைக்கு கூட்டி வர சொன்னார்கள். சென்னை வந்த தியாகராஜனின் அப்பாவிற்கு **2-3** தினங்களில், ஆபரேஷனே நடந்து முடிந்தது. ஸ்ரீஸ்வாமிஜி நேரிலேயே சென்று, பிரசாதம் தந்து அருளினார்கள். அவரும் இன்று நலமாக இருக்கிறார்.

தியாகராஜன் அண்ணா ராமகிருஷ்ணனின் பிறந்த நாளன்று, எதிர்பாராமல் அவர் வீட்டிற்கு விஜயம் செய்தார் குருநாதர்; ராமகிருஷ்ணனின் குழந்தைகளுடன் பேசி மகிழ்வித்த குருநாதர், திடீரென தியாகராஜன் மன்னியிடம் "உங்கள் கணவர் இல்லை எனில், நீங்கள் மிகுந்த கஷ்டப்படுவீர்கள் அல்லவா?" என்று கேட்டிருக்கிறார்கள்.

ஆமாம் என்று அவரும் பதில் சொல்லி இருக்கிறார். ஆனால் குருநாதர், ஏன் இப்படி ஒரு கேள்வி கேட்டார் என ஒருவருக்கும் புரியவில்லை. வீட்டிலிருந்து கிளம்புகையில், குருநாதர் **unusual** ஆக ராமகிருஷ்ணனின் காரை காண்பித்து அவர் பையன் ஹரியிடம், "இதுதான் உன் அப்பா காரா" என எதையோ சொல்ல வருவது போல் கேட்டவாறே இருந்தார். ஹரி தன் அப்பாவை காரில் கொண்டு விட சொல்கிறேன் என்றபோது, "அதற்காக சொல்லவில்லை; வேண்டாம்; அவரை தொந்திரவு செய்யாதே" என்று சொல்லி, அந்த காரை பார்த்து கொண்டே இருந்தார். வந்தது போல் நடந்தே சென்றும் விட்டார். சரியாக பத்து நாட்கள் கூட ஆகி இருக்காது. ராமகிருஷ்ணன் ஓட்டி சென்ற அந்த கார், ஒரு வேனுடன் மோதி, முன்பக்கம் அப்பளம் போல் நொறுங்கி விட்டது. ஆனால் ராமகிருஷ்ணனுக்கு சிறு சிராய்ப்புகள் மட்டும்தான். வேறு ஒன்றும் ஆகவில்லை. அந்த அதிர்ச்சியின்பொழுதுதான், "அடடா! அன்று குருநாதர் எதற்கு அப்படி பேசினார். காரை பற்றி விசாரித்தார் என யோசித்தோமே. இன்று அதற்கு நிஜ காரணம் புரிகிறது. அவர் அருளல்லவா நம்மை காப்பாற்றி இருக்கிறது" என அனைவரும் உணர்ந்தனர்!!

தியாகராஜனின் மனைவி ஸ்ரீமதி சுதா, மாண்டிசோரி கல்வி வழியில் சர்டிபிகேட் பெற்றவர். அமெரிக்காவிலேயே கோபகுடீரம் அணியிலிருந்து குழந்தைகளுக்கு ஸ்லோகம், கதைகள் எல்லாம் நன்கு சொல்லி கொடுத்தவர். சென்னையிலும் அப்படியே, கோபகுடீரம் அணியில் ஒருவராக, நன்றாக செயலாற்றி வருகிறார். தியாகராஜன் பெரிய அண்ணா திரு.பாலசுப்ரமணியமும் வளைகுடா நாடுகளில், நம் சத்சங்கத்தில் இருந்து வருகிறார்.

இப்படி இவர் குடும்பம் முழுவதுமே, குருநாதரால் ஆட்கொள்ளப்பட்டு அழகாக இருந்து வருகிறது.

**காலை 7.20 - 7.30AM <u>ஒவ்வொரு சனிக்கிழமையும்</u> *பொதிகை* தொலைக்காட்சியில் "*மதுரகீதம்*" - ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பகவானை தியானம் செய்வதால், ஒருவருக்கு சித்திகள் ஏற்படுகின்றது. பிறர் மனம் அறிதல், தூரதேசத்தில் நடப்பதை அறிதல், நடக்க போவதை சொல்வது போன்ற சித்திகள் ஏற்படுமாயின், அவை நல்லதுதானே? சித்திகளை ஏன் உயர்வாக சொல்வதில்லை?

பதில்: ஒரு பெரிய பணக்காரர் இருக்கிறார். அவருக்கு அது பெருமையாக இருக்கும். ஆனால் ,அவருடைய அந்த செல்வம், அவருக்கு மன அமைதியை தராது. அழகாக ஒருவர் இருக்கிறார். அது குறித்து, அவர் பெருமிதம் கொள்ளலாம். ஆனால், அந்த அழகு அவருக்கு மன அமைதியை தருவதில்லை. ஒருவர், பெரிய பதவி வகிக்கிறார். அது அவருக்கு, ஒரு கௌரவத்தை வேண்டுமானால் தரும். மன அமைதியை எப்படி தரும்? ஒரு பெரிய மருத்துவர் வல்லுனராக இருக்கிறார். அதனால், அவருக்கு பெரும் புகழ் வருகிறது. எங்கும் அவரை பற்றிய பேச்சு, கொஞ்ச காலத்திற்கு இருக்கிறது. அந்த புகழ், அவருக்கு அமைதியை தந்து விடும் என்று நினைக்கிறீர்களா? ஒரு விஞ்ஞானி இருக்கிறார். அயராது பாடுபட்டு, ஒரு விஷயத்தை கண்டுபிடிக்கிறார். அது அவருக்கு, நிரந்தர மன அமைதியை தந்து விடுமா என்ன? அதனால் அவருக்கு செல்வம், புகழ், சௌகரியம், மதிப்பு எல்லாம் கிடைக்கும். ஆனால் இது எல்லாம் மன அமைதியை தருமா என்ன?

இப்படி, பல விஷயங்களை சொல்லிக்கொண்டே போகலாம். இவை எல்லாம், பெருமையாக இருக்குமே தவிர மன அமைதியை தரவே தராது.

அப்படியே ஒருவரிடம் சித்திகள் இருக்குமானால், அதற்காக அவரை சுற்றி, பலர் வலம் வருவர். ஒரு கூட்டம், அவரது பெருமையை பேசிக்கொண்டே இருக்கும். ஆனால் அந்த கௌரவமோ, பெருமையோ அவருக்கு ஒரு விதத்திலும் மன சாந்தியை தராது. ஞானம் மட்டுமே, உண்மையான நிரந்தர மன சாந்தியை தரும்.

கேள்வி: நாம் த்ருட விஸ்வாசத்துடன் பக்தி செய்து கொண்டிருந்தால் போதும்; பகவான் அந்திம காலத்தில் ஞானத்தை அருளி, முக்தி கொடுத்து விடுவான் என்கிறீர்கள்? பகவான் ரமணரோ முக்தியை ஜீவ தசையில் அடைய வேண்டும் என்கிறாரே? நீங்கள் சொல்வது முரண்பாடாக உள்ளதே!

பதில்: ஜீவதசையிலேயே முக்தியை அடைய வேண்டும் என்று சொல்லிய பகவான் ரமண மஹரிஷி கூட, பழனிஸ்வாமி, தனது தாயார், தான் வளர்த்த விலங்குகளுக்கு ஆகியோருக்கு அந்திம காலத்தில்தான் தீக்ஷை கொடுத்து முக்தி அளித்தார். இதில் முரண்பாடு ஒன்றுமில்லை.

## சனாதனப்புதிர் பகுதி 72 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. மஹாபாரதத்தில் மின்னலுக்கு ஒப்பாக யார் யார் சொல்லப்படுகிறார்கள்?
2. ஸ்ரீ அதாவது லஷ்மிதேவிக்கு ஒப்பாக மஹாபாரதம் எவர்களை சொல்கிறது?
3. பெண் நண்டுக்கு எதிரிகள் யார்?
4. தாமரையை மஹாபாரதம் எவ்விதமான பெயர்களால் தெரியப்படுத்துகிறது?
5. மஹாபாரதத்தில், இந்திரனையும் சிவனையும் உபமானமாக பல இடங்களில் சொல்கிறார். எத்தனை இடங்கள்?
6. ரோஹிணி நஷத்திரத்திற்கு உபமானமாக வியாஸர் யாரை கூறுகிறார்?
7. யானையை உபமானமாக மஹாபாரதம் எத்தனை இடத்தில் கூறுகிறது? யானையின் மற்ற பெயர்கள் என்ன?
8. அழகிய திரௌபதியை மற்ற பெண்களோடு வியாசர் எப்படி ஒப்பிடுகிறார்?
9. சக்ரவாஹ பக்ஷிகளை வியாசர் எதற்கு ஒப்பிடுகிறார்?
10. மூங்கில், வாழை, நாணல் இவைகளில் எப்பொழுது பழம் தோன்றுகின்றதோ அப்பொழுது அவை அழிந்து விடுகின்றன. நண்டுவின் கர்ப்பமும் அழிவை காட்டுகிறது. இப்படிப்பட்ட வார்த்தைகளை யார் யாரிடம் சொல்கிறார்?



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 7

–ஸ்ரீ ஸ்வாமிஜி (23)

பிரம்மா நாரதரிடம் அவதாரங்களின் தோற்றம், கார்யம், குணம் இவைகளைச் சுருக்கமாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார். (சென்ற இதழ் தொடர்ச்சி... மேலும் ..)

அந்த பகவானால், எனக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதம் என்பது இதுதான். இது அவனது விபூதிகளின் சுருக்கம். நீ அதை விரிவாக்குவாயாக. எவ்விதம் வர்ணித்தால், அந்த ஹரியிடம் ஜனங்களுக்கு பக்தி உண்டாகுமோ, அப்படி மனதில் நன்கு சிந்தித்து வர்ணிப்பாயாக. எப்படி வர்ணித்தால், பகவான் என்று ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையும், அதனால் மன நிம்மதியையும் மக்கள் உணர்வார்களோ, அவ்வாறு மனதில் கொண்டு வர்ணிப்பாயாக. இந்த பகவானே அடையத்தக்கவன் என்று மனதில் நன்கு படிந்து, மனிதர்களுக்கு அவன் மீது மேலும் மேலும் பக்தி வளரும் விதமாக, நான் கூறிய சுருக்கமான பகவத் விபூதிகளை விரிவாக வர்ணிப்பாயாக. ஈச்வரனுடைய மாயையை வர்ணிப்பவரும், நித்யம் கேட்பவர்களுமான ஜீவன்களுடைய மனது மாயையினால் மோஹத்தை அடைவதில்லை. பிரம்மா, ருத்ரன் போன்றவர்களும் பகவானின் மாயையின் எல்லையை புரிந்துகொள்ளவில்லை. எவ்வளவோ விரிவாக சிருஷ்டியை வர்ணித்தும் பிரம்மா தனது வாக்காலேயே சுருக்கமாகவே பகவத் விபூதிகளை நான் உனக்கு கூறினேன் என்றே சொல்கிறார். ஏனென்றால், பகவானுடைய மாயை எல்லை இல்லாதது. பகவானுடைய மாயை புரிந்து கொள்ளவே முடியாது என்பதையே முடிவாகக் கூறுகிறார். ஆக, இது விஷயமாக மனதை செலுத்துவதைக் காட்டிலும் பகவானின் கருணை, பக்த வாத்ஸல்யம் போன்றவற்றை மனதில் கொண்டு மீண்டும் மீண்டும் அவனை பஜிப்பதிலேயே மனதை செலுத்துவது சாலச் சிறந்தது. ஒரு மரத்தில் எத்தனை கிளைகள், எத்தனை இலைகள்

போன்றவற்றை அறிவதைக் காட்டிலும், அந்த மரத்தின் பழத்தை உண்பதே சிறந்தது அல்லவா? நாம் பகவானை எவ்வளவுக்கெவ்வளவு உண்மையாகவும் சிரத்தையுடனும் பஜிக்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு மாயை நம்மை விட்டு விலகும். அந்த அளவிற்கு அதன் சூக்ஷ்மங்களும் நமக்குப் புரியும். மாயையை, நம் மீது போட்டிருக்கும் பகவானே அதை நம் மீதிருந்து எடுத்தாலே அன்றி, அவனை நாம் உணர முடியாது. அதனால், அவன் அருளை பெற வேண்டி, நாம் இடைவிடாது சிரத்தையுடனும், பொறுமையுடனும் அவனை பக்தியுடன் கீர்த்தனம் செய்வது தவிர, வேறு உசித மார்க்கம் ஏதும் இல்லை.

## அத்யாயம் 8

நாரதருக்கு பிரம்மா செய்த உபதேசத்தை முழுவதுமாக சுகர் கூற, அதைக் கேட்ட பரீக்ஷித் மேலும் சில கேள்விகளைக் கேட்கிறார். ஹே பிரம்மரிஷே! குணங்களுக்கு அப்பாற்பட்ட அந்த பகவானின் குணங்களை, எடுத்துரைக்குமாறு பிரம்மதேவரால் தூண்டப்பட்ட நாரதர், அதை யார் யாருக்கு எப்படி எப்படி உபதேசித்தார். அதை நான் அறிய விரும்புகிறேன்.

பகவான் குணங்களற்றவர் என்று கூறும்போது அவரிடம் பிராக்ருதமான எந்த குணங்களுமில்லையென்று புரிந்துகொள்ளவேண்டும். அப்ராக்ருதமான கல்யாண குணங்களையுடையவன் பகவான். அந்த கல்யாண குணங்களிலும் ஸர்வோத்தமமானது சரணாகத வாத்ஸல்யம் என்பதே! தன்னையே அண்டியிருப்போரை ஒருக்காலும் கைவிடுவதில்லை எனும் அவனது விரதம், எல்லோருக்கும் அபயம் அளிக்கும் அவனது பிரதானமான கல்யாண குணம். வேதம் அறிந்தவர்களுள் சிரேஷ்டரே! உங்களிடமிருந்து நான் இவற்றை அறிய விரும்புகிறேன். அற்புதமான சேஷ்டிதங்களுடைய ஸ்ரீஹரியின் கதைகளைத் தாங்கள் சொல்லவேண்டும். அவைகள் ஸர்வலோகங்களுக்கும் எல்லா மங்களங்களையும் அளிக்கவல்லவை. ஏனென்றால், கிராமிய பேச்சு கலப்பில்லாத பகவத் கதைகள் கூறப்படும் இடத்தில் பகவான் சூக்ஷ்மமாக வந்து அங்கிருக்கும் அனைவரின் மனதிலும் சாந்தியை அளிக்கின்றான் அல்லவா?

கதயஸ்வ மஹாபாக யதாஹமகிலாத்மனி

க்ருஷ்ணே நிவேச்ய நி:ஸங்கம் மனஸ்த்யக்ஷ்யே களேவரம் 2:8:3

அதனால், எவ்விதம் ஸர்வாந்தர்யாமியான அந்த ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில் மனதைச் செலுத்தி இந்த தேஹத்தை விடுவேனோ, அவ்விதம் எனக்கு இந்த ஸ்ரீஹரியின் கதைகளை எடுத்துரைப்பீராக. நீங்கள் கதை கூறும் விதத்தில் எனக்கு மனது முற்றிலும் பற்றற்றதாகி, கிருஷ்ண சிந்தனையன்றி, வேறு ஒரு சிந்தனையேயில்லாமல், ஏழாவது நாள் மரணம் நெருங்கும்பொழுது, இந்த உடம்பை நான் உதறித் தள்ள வேண்டும். அவ்விதம் ஹரிகதையை கூறுங்கள். தினமும் பகவத் குணங்கள் கேட்பவர்களின் மற்றும் சொல்பவர்களின் ஹ்ருதயத்தில், வெகு விரைவிலேயே பகவான் பிரவேசிக்கிறார் அன்றோ!'

பகவானின் சேஷ்டிதங்களை, சிரத்தையுடன் விடாமல் கேட்கவேண்டும் அல்லது சொல்லவேண்டும். ஒரு நாள் கூட கதை இல்லாமல் கழிந்துவிட்டால், அதற்கு உண்மையாக மிகவும் வருந்த வேண்டும். அந்தோ! இன்று பகவத் கதையில்லாமலேயே பொழுதை செலவழித்துவிட்டோமே என்ற வருத்தம் ஏற்பட வேண்டும். வைகுண்டத்தில் இருக்கும் பிரபு, நமக்காகதானே இவ்வுலகிற்கு இறங்கி வந்து லீலைகள் செய்தான். அவனை நாம் ஸ்மரிப்பதற்காகவே, இவ்வளவு லீலைகள் புரிந்தான். அத்தகைய லீலைகளைச் சொல்பவர்கள் சொல்லி, சிரத்தையுடன் கேட்போமானால், பகவான், நமது ஹ்ருதயங்களில் வெகு விரைவிலேயே குடிபுகுவார் என்பதில் ஐயமில்லை.

நமது சமகாலத்தில் ஒரு மஹான் வாழ்ந்து, அவரிடமிருந்து பகவத் குணம் கேட்காதவர்களின் துர்பாக்யத்தை என்னவென்று கூறுவது? நமக்காக வேறொருவர் ஏதாவது சாதனை செய்ய முடியுமா?' என்றால், ஆம்! நமக்காக மற்றவர் செய்யும் பக்தியே பகவத் கதைகளைக் கூறுவது என்பது. வேறொருவர் கூற, நாம் கேட்டால் கூட போதுமே! நாம் வேறேதும் செய்ய வேண்டாமே! அவர் கதை கூறக் கேட்டால் பக்தி நமக்கல்லவோ வரப்போகிறது!

(கனியும்)

# எதையும் துறக்கவில்லை ..

- ஸ்ரீஸ்வாமிஜி

ஒரு மஹாத்மா எப்பொழுதும் தனிமையில் அமர்ந்து பகவானை தியானம் செய்து கொண்டும், ஸதா பகவன் நாம கீர்த்தனமும் செய்து வந்தார். அவரை தரிசனம் செய்வதற்கும் அவருடன் இருந்து, பகவன் நாமகீர்த்தனம் செய்வதற்கும், சிறிது சிறிதாக மக்கள் வர தொடங்கினார்கள். அவரை சுற்றி ஒரு கூட்டம், எப்பொழுதும் இருந்து கொண்டே இருந்தது. அவரை சுற்றி, அழகான சிறிய ஆஸ்ரமமும் உருவானது. அந்த ஆஸ்ரமத்தை, பொறுப்பாக கவனித்து கொள்ள, ஒரு சீடனும் வந்து சேர்ந்தான்.

அவன் நன்றாக படித்தவன்; வசதியுள்ளவன்; உயர்ந்த பதவியில் இருந்தவன். இவற்றையெல்லாம் துறந்து, ஒரு மஹாத்மாவிற்கு சேவை செய்ய ஒரு வாய்ப்பு கிடைப்பதே, ஒரு பாக்யம் என்று வந்து சேர்ந்தான். அவருடனே பல வருடங்கள் தங்கி, சேவைகளை மிகவும் நேர்த்தியாக திறம்பட செய்து வந்தான். நாம் எல்லாவற்றையும் விட்டு விட்டு, ஒரு மஹாத்மாவிற்கு சேவை செய்யும் பாக்யம் கிடைத்ததே என்று நினைத்து நினைத்து மகிழ்வான். ஆனால் அந்த மஹாத்மா, "நீ எதையும் துறக்கவில்லை என்பதை, நன்றாக ஞாபகம் வைத்து கொள்" என்பார். நாம்தான், எல்லாவற்றையும் துறந்து விட்டு இவருடைய சேவையே லக்ஷியம் என்று வந்து விட்டோம். பிறகு ஏன், நம்மை பார்த்து எப்பொழுதும் இப்படி சொல்லிக்கொண்டே இருக்கின்றார் என அவனுக்கு தோன்றும்.

ஆஸ்ரமத்தில் உள்ள தோட்டங்களை எல்லாம் கவனித்து, பராமரித்து வந்த தோட்டக்காரர் ஒருவர், சொல்லாமல் கொள்ளாமல் லீவு போட்டு விட்டார். சீடனுக்கோ வேலை பளு அதிகமாகி விட்டது. சொல்லாமல் கொள்ளாமல் லீவு போட்ட, அந்த தோட்டக்காரர் ஒரு மாதம் கழித்து வந்தபொழுது, அவரை நன்றாக கடிந்து கொண்டு, வேலையில் இருந்து நிறுத்தி விட்டான் சீடன்.

அந்த தோட்டக்காரர், அந்த மஹாத்மாவிடம் சென்று தன்னுடைய குடும்ப கஷ்டங்களை எல்லாம் சொல்லி அழுது,

இந்த வேலை போனால், தன் குடும்பமே மிகவும் சிரமப்படும் என்று சொல்லி அழுதார். மஹாத்மாவும் கருணையுடன் அவரை தொடர்ந்து, வழக்கம் போல ஆஸ்ரமத்தில் வேலை செய்ய சொன்னார்.

இது தெரிந்தவுடன், ஆஸ்ரம நிர்வாகத்தை பார்த்து வந்த சீடனுக்கு அழுகை வந்தது. கோபம் வந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. அந்த மஹாத்மாவிடம் வந்து, "நான் இனி உங்களுடன் இருக்க மாட்டேன், கிளம்புகின்றேன்" என்று பெட்டி படுக்கை எல்லாம் தூக்கி கொண்டு கிளம்பி விட்டான். அந்த மஹாத்மா அவனை அழைத்து, "ஏன் கிளம்பி விட்டாய்" என்றார். அதற்கு அவனோ, "நான் வேலையிலிருந்து நீக்கியவனை நீங்கள் மீண்டும் சேர்த்து விட்டீர்கள். பிறகு இங்கு எனக்கு என்ன வேலை, நான் கிளம்புகின்றேன்" என்றான்.

அப்பொழுது, அந்த மஹாத்மா அவனை அழைத்து சொன்னார், "நான் எப்பொழுதும் உன்னிடம், நீ எதையும் துறக்கவில்லை என்று கூறுவேன். அப்பொழுதெல்லாம் உனக்கு, நாம்தான் எல்லாவற்றையும் விட்டு விட்டு இவரே கதி என்று வந்து விட்டோமே, பிறகு இவர் ஏன் இப்படி சொல்லிக்கொண்டு இருக்கின்றார் என்று தோன்றும். நீ படிப்பு, பணம், பதவி, குடும்பம் எல்லாவற்றையும் துறந்தாய். "நான்" என்பதை துறக்கவில்லை".

"அதனால்தான் நான் வேலையை விட்டு நிறுத்திய ஒருவரை நீங்கள் எப்படி சேர்க்கலாம் என்று, என் மேலேயே உனக்கு வருத்தமும் கோபமும் வருகின்றது. நீ எதை துறந்தாலும், 'நான்' என்பதை துறக்காவிட்டால், எதையும் நீ துறக்காதவனே. 'நான்' என்பதை துறந்து விட்டால், நீ எல்லாவற்றுடனும் இருந்தாலும் நீ முற்றிலும் துறந்தவனே" என்பதை அவனுக்கு உணர்த்தினார். "நான்" இருந்தால், மீண்டும் எல்லாம் துளிர்த்து விடும்.

சீடன் இவ்வாறு கேட்ட பிறகும், அவனால் தன்னை சமாதானப்படுத்தி கொள்ள முடியாமல் தவித்தான். அப்பொழுதுதான், "நான்" என்பது தனக்குள்ளே போடும் ஆட்டத்தை, தனக்குத்தானே உணர்ந்து, வெட்கி தலைகுனிந்தான்.

# விபுல தேவர்

- ஜனனி

ஸ்ரீப்ருந்தாவனத்தில் லலிதாசகியின் அம்சமாக தோன்றிய ஸ்வாமி ஸ்ரீஹரிதாசரை நாம் அறிவோம். பாங்கே விஹாரியின் திவ்ய விக்ரஹம், பகவானின் அனுக்ரஹத்தால் ஸ்வாமி ஹரிதாசர் பெற்றதே. இவர் சங்கீதத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராகவும், தனது கலை முழுவதும் பகவானுக்கே சமர்ப்பித்த மஹாபக்தரும் ஆவார்.

ஹரிதாசருக்கு விபுலதேவர் என்றொரு சிஷ்யர் இருந்தார். குரு கைங்கர்யத்தை மட்டுமே தனது குறிக்கோளாக இவர் கொண்டிருந்தார். மனதினால் அல்லும் பகலும் குருநாதரின் திருவடிகளையே தியானிப்பார். வாக்கினால் எப்பொழுதும் அவரது புகழையே பாடி மகிழ்வார். கண்களால் இமை கொட்டாமல் குருதேவரின் திருவுருவையே பார்த்து நிற்பார். ஹரிதாசர் கூறும் பகவத் லீலைகளை, காதால் கேட்டு ஆனந்திப்பார். ஹரிதாசருடைய சரணங்களின் சுகந்தத்தையே நுகர்ந்து, தனது வாழ்க்கையையே சபலமானதாக எண்ணினார்.

இப்படி மனது, வாக்கு, உடல், அனைத்தையுமே குருதேவரின் சேவையில் ஈடுபடுத்தி, பரமானந்தமடைந்தார் விபுல தேவர். இப்படி குருவான ஹரிதாசரின் சேவையில் மூழ்கிய விபுலதேவருக்கு, பகவான் ஸ்ரீக்ருஷ்ணனை தரிசனம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கூட எழவில்லை.

சில காலங்களுக்கு பின், மஹாத்மா ஹரிதாசர் கோலோகம் சென்றடைந்தார். அனவ்ரதம் குருவுடனே வசித்து சேவை செய்த விபுல தேவரால், குருவிரஹத்தை தாங்க முடியவில்லை. இதனால் அவர் துடிதுடித்தார். குரு இல்லாத உலகத்தை காண விரும்பாத விபுலதேவர் காந்தாரியை போல், ஒரு துணியால் தன் கண்களை கட்டிக்கொண்டு விட்டார்.

இவ்வாறு, குருவிரஹத்தால் துடித்து கொண்டிருந்த விபுலதேவரின் குருபக்தியால் ஸ்ரீராதாதேவி ப்ரசன்னமானாள்.

தனது தரிசனத்தை அவருக்கு அளிக்க தீர்மானித்தாள். ஸ்ரீமதி ராதாதேவி கண் முன் நிற்பதை அறியாத விபுலதேவரிடம், தேவி, "விபுலதேவ! கண்களை திறந்து என்னை பார்" என்று கூறினாள்.தேவியின் மதுரமான குரலை கேட்ட விபுலர், கண்கள் மீது கட்டியிருந்த துணியை அவிழ்த்தார்.

நீலவண்ண ஆடை அணிந்த கருணையே வடிவான ராதாதேவியை கண்டார் விபுல தேவர். அபயம் அளித்த ஸ்ரீராதா தேவி, விபுலதேவரை ஆஸ்வாசப்படுத்தி, "மஹாபக்தனே நீ வேண்டும் வரத்தை கேள்" என்றாள்.

தாயே! எனது குருநாதரின் லோகத்தையே நான் அடைய விரும்புகிறேன். இதையே அருள்வாயம்மா! என்று ப்ரார்த்தித்தார்.

"ரஹஸ்யத்தை கேள் விபுல! உனது குரு கோலோகத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணனுடன் நித்யவாசம் செய்கிறார். தானே ஒரு கோபியாக இருந்து க்ருஷ்ண தாஸ்யம் செய்கிறார். நீயும் ஹரிதாசரின் ஸகீ என்ற பாவத்தை கொண்டு, பகவானுக்கு சேவை செய்து அவனை ஆராதிப்பாயாக" என்று ஸ்ரீராதாதேவி கூறி மறைந்தாள்.

விபுலரும் தன்னை ஹரிதாசரின் ஸகியாக பாவித்து விபுலா என்ற பெயருடன் பக்தி செய்து கோலோகத்தை அடைந்தார்.

---

பிறந்த ஒவ்வொரு ஜீவனுக்கும், நாம் இறந்து விட போகின்றோமே என்ற கவலையும், இறப்பை பற்றிய பயமும் உள்ளது;

அதே போல, எந்த ஒரு ஜீவனுக்கும், அது, பிறப்பதற்கு முன் இருந்த நிலையில், பிறந்து விட போகின்றோமே என்ற கவலையும், பயமும் இருந்ததா என்பதை பற்றி, நமக்கு தெரிவதில்லை.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

## ஸ்ரீஞானேஸ்வரர்-3

கனவிலேயே விட்டல்பந்த் பாண்டுரங்கனை கேள்வி கேட்டார், "நான் காமத்தை ஜெயித்தவன். எனக்கு எதற்கு திருமணம்" என்றார். பாண்டுரங்கனோ விடுவதாயில்லை.

"சரி! நீதான் காமத்தை ஜெயித்தவன் ஆயிற்றே. நீ அப்படிப்பட்டவன் என்பது எனக்கு தெரியாதா? காமத்தை வென்றவன் என்பதால், திருமணம் என்பது உனக்கு பயம் தரக்கூடிய விஷயமல்ல. ஏனெனில் அதில் மாட்டிக் கொள்வோம் என்ற பயமிருந்தால்தானே, திருமணத்திற்கு தயங்க வேண்டும்" என்றான் பாண்டுரங்கன். அவனை யார் ஜெயிப்பது? முடிவு செய்ததே அவன்தானே?

இப்படி விட்டல்பந்த் கனவில் போய், பேசிய பாண்டுரங்கன், மறுபுறம் சீதோபந்த் கனவிலும் சென்று, பண்டரீபுரத்திற்கு அவர் பெண் ருக்மணியுடன் வருமாறு ஆணையிட்டான். சீதோபந்த் முதலில் ஆசைப்பட்டது போலவே, இப்பொழுது பாண்டுரங்கன் ஆசியுடன், திருமணம் நடந்தேறியது.

திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுபவன், அதை பற்றிய கனவுகளில் இருப்பான். சுற்றுலா சென்று கேளிக்கைகளில் ஈடுபட்டு, செல்வம் ஈட்டி, குழந்தைகளைப் பெற்று, நல்ல வீடு கட்டி, சுகபோகமாக இருக்கலாம் என்று ஆசைப்படுவான் அவன். இப்படி ஆசைப்படும் ஒருவனின் திருமண வாழ்வு நன்றாகவே போகும். திருமணம் வேண்டாம் என்று உளமாற நினைத்து, அதன்படி வாழ நினைப்பவர்களுக்கு திருமணம் செய்து வைத்தால், அது நிலைக்காது. ஸம்ஸாரத்தில் வரும் சிறு சிறு துக்கங்களை கூட, அவர்கள் காரணம் காட்டி, அதிலிருந்து விடுபட முயல்வர். அதுதான், விட்டல்பந்த்தின் நிலையுமாக இருந்தது. பாண்டுரங்கன் திருமணம் செய்து வைத்தான் எனினும்,

இவருக்கு சன்யாசத்தில்தான் ஆசை அதிகம் இருந்தது. ஜபமும், தியானமும் இள வயதில்தானே முடியும். 40 வயது ஆகி விட்டது என்று பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள். உண்மையில் பகவானை அடைய இருக்கும் காலத்தில் ஒருநாள் குறைந்து விட்டது என்பதை மறந்து விடுகின்றனர். வயதானபின் உடம்பில் அசதியும், கஷ்டமும், வியாதியும் பிறக்கும். வீராசனம், பத்மாசனம் எல்லாம் போட முடியாது. முட்டி வலிக்கும். அதன்பின் எப்படி தியானம் செய்ய முடியும்? "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பர். உடம்பில் காற்றுள்ளபோதே, உயிருள்ள போதே, இறைவனை துதித்துக்கொள் என்பதுதான் அதற்கு அர்த்தம்.

விட்டல்பந்த்க்கும் எப்படியாவது இந்த திருமண பந்தத்தில் இருந்து விடுபட ஆசை இருந்தது. அவருக்கு, "பிறவி எடுத்ததின் பயனை நான் இன்னும் அடையவில்லை. அதனால் எங்காவது சென்று துறவு வாழ்க்கை மேற்கொள்வோம்" என்று தோன்றிக் கொண்டே இருந்தது.

பாகவதத்தில், கர்த்தமபிரஜாபதி பற்றி சரித்திரம் இருக்கிறது. தவம் செய்து வந்த அவர், பகவானின் அருளினால் கிடைத்த தேவஹூதியை திருமணம் செய்து கொண்டார். குழந்தை பிறந்த உடன், அவர் சன்யாசம் மேற்கொண்டார். இந்த சரித்திரத்தையும் இது போன்ற மஹான்களின் சரித்திரத்தையும் அடிக்கடி நினைத்துக் கொள்வார் விட்டல்பந்த். ஒரு குழந்தை பிறந்தால், மனைவி ருக்மணிக்கு அந்த குழந்தை துணையாக இருக்கும். நாம் அவளை விட்டு பிரியலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த விட்டல்பந்த்துக்கு, அந்த எண்ணம் நிறைவேறவில்லை. குழந்தையே பிறக்கவில்லை.

எல்லாம் தெய்வ சங்கல்பம். பகவான் செய்து வைத்த திருமணம் எனினும், குழந்தை பிறக்க வெகுகாலம் ஆனபடியினால், மனைவியிடம் வெளிப்படையாக சொல்லிக் கொள்ளாமல் சன்யாசம் மேற்கொள்ள முடிவு செய்தார் விட்டல்பந்த். நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும் என்பது விட்டல்பந்த் விஷயத்துக்கு பொருத்தமாக அமைய இருந்தது.

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

1

- ஜனனி

ஸ்ரீஸனாதன கோஸ்வாமி மஹாப்ரபு ஸ்ரீசைதன்ய தேவரின் பிரதான சிஷ்யர்களுள் ஒருவராவார். மஹாப்ரபுவால் நியமிக்கப்பட்டு, ப்ருந்தாவனத்திற்கு சென்ற ஆறு கோஸ்வாமிகளுள் இவர் முக்யமானவராவார்.

இவரது சகோதரர் ரூப கோஸ்வாமியாவார். இவரும் ப்ரபுவின் அத்யந்த சிஷ்யராவார். இவர்கள் இருவரையும் ரூப்-சனாதன் என்றே சேர்ந்தே குறிப்பிடுவார்கள். இவர்களது பூர்வீகர்கள், கர்நாடக தேசத்தை சேர்ந்தவர்கள். இவர்களது கொள்ளு பாட்டனார் காலத்திலேயே, இவர்கள் கர்னாடக தேசத்தை விட்டு, 'நவஹட்' என்னும் இடத்திற்கு குடி பெயர்ந்தார்கள். இப்பரம்பரையில் குமார்தேவ் மற்றும் ரேவதி தேவி தம்பதிகளுக்கு மூன்று புதல்வர்கள் பிறந்தார்கள். அமர், சந்தோஷ் மற்றும் அனூப் என்ற இம்மூவரே ரூபர், ஸனாதனர் மற்றும் வல்லபர் என்று பிற்காலத்தில் பிரசித்தமானார்கள்.

இவர்கள் சமஸ்கிருதம் ,அரபி மற்றும் பாரஸி மொழிகளில் தேர்ச்சி பெற்றதோடு மட்டுமல்லாமல், மிகவும் புத்திசாலிகளாக இருந்தார்கள். அதனால், விரைவிலேயே அமர் மற்றும் சந்தோஷிற்கு பாதுஷாவின் ராஜமந்திரி பதவி கிட்டியது. பாதுஷாவின் சங்கத்தினால், இவர்கள் உடை, பாஷை, வேஷ-பூஷணங்கள் எல்லாமே இஸ்லாமியர்களது போலாகி விட்டது. இவ்வளவு ஏன்? ஊர்மக்கள் இவர்களின் இயற்பெயரையே அறியாத வண்ணம், பாதுஷா அழைக்கும் தபிர்காஸ்-சாகிர்மல்லிக் என்ற பெயராலேயே, அவர்கள் அறியப்பட்டார்கள்.

இவர்கள் நத்வீபத்திற்கருகே ராமகேலி என்னும் இடத்தில் வசித்து வந்தார்கள். இவர்களின் வேஷமோ செயல்களோ எப்படி இருந்தாலும், எக்காலத்திலும் இவர்கள் சமஸ்கிருத வித்வான்கள் மற்றும் வைஷ்ணவ சாதுக்களை பூஜித்த வண்னம் இருந்தார்கள்.

இப்படி அடிக்கடி ஏற்படும் சாது சங்கத்தாலும், மற்றும் அவர்கள் கற்றறிந்த சாஸ்திரங்களை ஆழ்ந்து சிந்தனை செய்ததாலும், அவர்களுக்கு தீவிரமான வைராக்கியம் ஏற்பட்டது. ஒரு மஹானிடம், தங்களை முழுவதுமாக ஆத்ம சமர்ப்பணம் செய்து விட வேண்டும் என்று அவர்கள் துடித்தார்கள். அச்சமயம், அவர்களது காதில் மஹாப்ரபுவின் பெருமைகள் விழுந்தன. மஹாப்ரபுவின் பகவன்நாம கீர்த்தனம் அப்பொழுது, முற்றிலும் புதியதான ஒரு விஷயமாக இருந்தது.

"பதிதர்கள், வீழ்ந்தவர்கள் என்றும் வீழ்ந்தவர்களே" என்னும் நிலையை மாற்றி, அவர்களுக்கும் கதி உண்டு அதுதான் நாமகீர்த்தனம் என்ற மஹாப்ரபுவின் அபய வசனம் இவர்கள் காதையும் எட்டியது. தங்களை சன்மார்க்கத்திலிருந்து வீழ்ந்தவர்களாக கருதிய இந்த சஹோதரர்கள், மஹாப்ரபுவின் அபய வசனங்களை கேட்டு, மிகவும் மனவருத்தத்துடன் நவத்வீபத்தில் மஹாப்ரபுவிற்கு கடிதம் மூலம் செய்தி அனுப்பினார்கள்.

அவர்களது கடிதத்திற்கு பதிலாக ப்ரபு, "பர புருஷனிடம் மோஹம் கொண்ட ஸ்திரீ, வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவள் மனது எப்பொழுதும் அந்த ஜாரனின் நினைவிலேயே ஆனந்திக்கும்" என்ற பொருள்படும்படி, ஒரு ஸ்லோகத்தை எழுதி அனுப்பினார். அதாவது, நீங்கள் ராஜாவின் கீழ் வேலை செய்தாலும் ஹிருதயத்தில் பகவானுடன் ரமியுங்கள் என்று பொருள்.

ப்ரபுவின் இந்த உபதேசங்களை பெற்றபின், அவர்களது இதயத்தில் ப்ரபுவை காண வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகியது. ப்ரபு சன்யாசம் பெற்று நீலாசலம் சென்று விட்டார் என்ற செய்தியை அறிந்து, இவர்கள் மிகவும் துன்புற்றார்கள்.

(தொடரும்)

## பாலகர்களுக்கு ஒரு கதை



# மலர் கல்வி!

மாதவனின் சிற்றப்பா சங்கரன். அவர் ஒரு அழகான மலர் தோட்டம் அமைத்து, மலர்களை தொடுத்து வியாபாரம் செய்து வந்தார். அவர் கலகலப்பாக பேச கூடியவர். தனது தெளிந்த பேச்சால், பலரையும் கவரும் குணம் கொண்டவர். அந்த தோட்டம், மாதவன் வீட்டு அருகில்தான் இருந்தது. மாதவன், தனிமையில் அந்த தோட்டத்தில் அமர்ந்திருந்தான். அவன் கண்கள், எதையோ பார்த்தவாறு இருந்தன. அருகில் இருந்த கற்களை தூக்கி போட்டுக்கொண்டு இருந்தான். அடிக்கடி மோவாய்க்கட்டையை முழங்காலின் மேல் தாங்கி, எதையோ யோசித்து கொண்டிருந்தான்.

சிற்றப்பா சங்கரன், அப்பொழுது தோட்டத்து பக்கம் வந்தார். அவர், மாதவனை பார்த்த மறுகணமே, அவன் ஏதோ கவலையில் மூழ்கி இருக்கிறான் என்பதை புரிந்து கொண்டு, "மாதவா! என்ன யோசனை? தேர்வு வருகிறதே. அது பற்றி கவலையா? நீ இப்படி இருந்து நான் பார்த்தது இல்லையே" என்றார்.

உடனே மாதவன், "சிற்றப்பா! என் எதிர்காலத்தை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது" என்றான். "விவரமாக சொல்" என்றார் சிற்றப்பா.

"நான் பத்தாவது படிக்கிறேன். இரு வருடங்களில் பனிரெண்டாம் வகுப்பு. அதன்பின் என்ன ஆகுமோ என பயம் வருகிறது. எனக்கு பல ஆசைகள் உள்ளன. அவை நிறைவேறுமா என்று தெரியவில்லை" என்றான் மாதவன்.

அவனுடைய கேள்வியை பார்த்து, அவன் சிற்றப்பா கொஞ்சம் புன்முறுவல் பூத்தார். சட்டென, அவனை தோட்டத்துக்குள் 'வா' என்று இழுத்து சென்றார். அங்கு சில செடிகளில், ரோஜாக்கள் சில மொட்டாகவும் சில மலர்ந்தும் இருந்தன. அதில் ஒன்றை காண்பித்து, "மாதவா! ஒன்று செய்! அந்த ரோஜா மொட்டில் ஒன்றை மலர செய்து விடு. ஆனால் அப்படி செய்யும்பொழுது, அந்த மொட்டில் ஒரு இதழும் கசங்கவோ கீழே உதிரவோ கூடாது" என்றார்.

மாதவன் தன் சிற்றப்பா சொன்னபடி, ஒரு மொட்டை தொட்டு, அதை மலர முயற்சித்து பார்த்தான். ஒரு பத்து நிமிடம் முயன்றும், அவனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. மொட்டை மலர வைக்க முடியாது என புரிந்து கொண்டவன், தோல்வி அடைந்த முகத்துடன், சிற்றப்பாவை பார்த்தான்.

சங்கரன் சிரித்து கொண்டே சொன்னார், "மாதவா, உன்னால் ரோஜாவை மலர வைக்க முடியவில்லை என்பதில் எந்த தவறும் இல்லை. யாராக இருந்தாலும் அது முடியாது. ரோஜா எப்படி மலரும்? அதே செடியில் பார். மேலே சில மலர்கள் மலர்ந்திருக்கின்றன. சூரிய ஒளி எனும் கடவுளின் கிருபையினாலேதான், அது அப்படி அழகாக மலருகிறது. வேறு எதுவும் அதை மலர வைக்க முடியாது. இறைவன் விதித்தபடி நடைபெறுகையில், எல்லாம் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்கும்".

"அது தானாக மலர்ந்தால், எப்படி அருமையாக இருக்கின்றது என்பதை பார்த்தாயா? எப்படி கன கச்சிதமாக இருக்கிறது பார்! ஆனால் நீ ரோஜா செடி மலர உதவலாம். எப்படி என்கிறாயா? அந்த ரோஜா செடிக்கு தினம் நீரை ஊற்றி, அதை ஆடு மாடுகள் கால் படாமல் வைத்து, வெயில் அதன்மேல் படுமாறு வைக்கலாம்".

"அப்படி தேர்விற்காக நன்றாக படித்து சரியாக எழுத முயற்சி எடுப்பது உன் பொறுப்பு. அதற்காக தயார்படுத்தி கொள்ள வேண்டும். இறைவன் மேல் நம்பிக்கையுடன் இதை நீ சரியாக செய்தாலே போதும். இது ரோஜாவுக்கு உரம் போட்டு, நீர் ஊற்றி, பாதுகாத்து, சூரிய ஒளி எனும் இறைவனின் க்ருபைக்காக வைப்பது போல ஆகும். இதை சரியாக செய்தால், ரோஜா எப்படி நிச்சயம் மலருமோ, அப்படியே இன்று நீ சரியாக தேர்வுக்கு தயார் செய்து கொண்டால், நாளைய எதிர்காலத்தை இறைவன் பார்த்து கொள்ள மாட்டானா என்ன? நிச்சயம் பார்த்து கொள்வான்" என்று சொன்னார்.

அதைக் கேட்டு, மலராத மொட்டு போலிருந்த மாதவனின் முகமும், மலர்ந்த ரோஜாவை போல் தெளிவு பெற்று மலர்ந்தது.

**பிப்ரவரி 21 - 23** குர்கானில் (டெல்லி) உள்ள ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திராவின், ஐந்தாவது வருட பூர்த்தியை ஒட்டி சத்சங்கம் நடைபெற்றது. தினமும் மாலையில் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். தினமும் காலையில் ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிய ஸ்ரீப்ரேமிக கிரந்தங்களின் பாராயணமும் நடைபெற்றது.

**மார்ச் 1 ஸ்டார் விஜய் டிவி பக்தி திருவிழா துவக்கம்** - சென்னை நாரத கானசபாவில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்டார் விஜய் டிவியின் பக்தி திருவிழாவை துவக்கி வைத்து அருளுரை வழங்கினார்கள்.

**மார்ச் 4,5 சைதன்யர் ஜெயந்தி** சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் ஸ்ரீக்ருஷ்ண சைதன்யரின் ஜெயந்தி மிக சிறப்பாக கொண்டாட பெற்றது. 4ஆம் தேதி காலை6 முதல் மாலை 6வரை அகண்டமாக மஹாமந்திர நாமகீர்த்தனமும் நடைபெற்றது.

மார்ச் 5 மாலை அன்று கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் ஜகன்னாதர் ரத உற்ஸவமும் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

**தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர் சத்சங்கங்கள் -**

**மார்ச் 6-8 தேதிகளில் தூத்துக்குடி** அபிராமி மஹாலிலும், **மார்ச் 9-11 தேதிகளில் சிவகாசி** மாஸ்டர் பிரிண்டர்ஸ் அஸோசியேஷன் ஹாலிலும், **மார்ச் 12-14 தேதிகளில் விருதுநகர்** SSசரஸ்வதி மஹாலிலும், மூன்று மூன்று நாட்களாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அன்பர்களுக்கு தரிசனமும் பிரசாதமும் அருளுரையும் வழங்கினார்கள். பக்தர்களின் சரித்திரங்களையும், நாம மஹிமையையும் குரு மஹிமையையும் அவர் எடுத்து சொல்ல சொல்ல, அதை கேட்டு ஆனந்திக்க வந்த அன்பர் கூட்டம், ஒவ்வொரு நாளும் பெருகிக்கொண்டே போனது. தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர் நாமத்வார்களுக்கு வந்து மஹாமந்திரம் சொல்லி பயனுற்ற அன்பர் பலர், தம் நாமானுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

விருதுநகரில் பள்ளி ஆசிரியை ஒருவர் பேசுகையில், "ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், வால்மீகி இல்லை என்றால் ராமாயணமும், வியாசர் இல்லை என்றால் பாரதமும், பாகவதமும் கிடைத்திராது என்று சொல்வார்கள். ஆனால் ஸ்ரீஸ்வாமிஜி இல்லை என்றால், விருதுநகரிலுள்ள என் போன்றோருக்கு மஹாமந்திரமோ, மஹான்களின் திவ்ய சரித்திரங்களோ கொஞ்சமும் எட்டி இருக்காது. என் போன்றோர் உயர்ந்திட ஸ்ரீஸ்வாமிஜி எப்படி பாடுபட்டு அருளி இருக்கிறார் என்பதை, எனக்கு புரிந்த அளவில் சொல்கிறேன்" என அழகாக பேசினார். பறவை, விலங்கினம், புல், பூண்டு ஒன்றின்றியே ... இகமும் பரமும் நல்கிடும் நாமம் ... என சகல ஜீவராசிகளுக்கும் ஸ்ரீஸ்வாமிஜி நாமம் மூலமாக அருளை வாரி இறைக்கிறார் என்பதை அவர் தம் சொந்த நாமானுபவமாக ஆதாரத்துடன் பகிர்ந்த பொழுது, அங்கு அதை கேட்டு உளம் உருகாதார் ஒருவரும் இல்லை. இதை போலவே ஒவ்வொரு இடத்திலும் அன்பர்கள் பேசினார்கள். அவர்கள் எடுத்து சொன்ன நாமானுபவங்களுக்கு, கணக்கும் எல்லையும் இல்லை என்பது கொஞ்சமும் மிகை அல்ல.

ஸ்ரீஸ்வாமிஜி வந்திருந்த இந்த நாட்களில் எங்கு திரும்பினாலும் இது பற்றி பேச்சுமாகவும், எளியாரும் வலியாரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அலைமோதியதுமாக இருந்ததே "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக" மஹாமந்திரமும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் இருக்கின்றனர் என்பதற்கு சான்று. ஒவ்வொரு இடத்திலும் "நாமத்வாருக்கு சென்று க்ருஷ்ணன் முன்னால் நாமம் சொன்னால், தீராத கஷ்டமும் தீரும்" என ஸ்ரீஸ்வாமிஜி அழுத்தந்திருத்தமாக சொல்லி வந்தார்கள்.

ஒவ்வொரு ஊரிலும், ஸ்ரீஸ்வாமிஜியை பார்த்தால் சைக்கிள் ஓட்டும் சிறுவர் "ஹரே ராமா .." சொன்னார்கள். பூ கட்டுபவர் நாமா சொன்னார். பெரிய தொழிலதிபரும் நாமம் இசைந்து சொன்னார். இதை பார்த்தபொழுது, சமூகத்தில் பலதரப்பட்டோருக்கும், குருநாதரின் அருளால், மஹாமந்திரம் பரவி அருளி இருக்கிறது என்பதை பார்க்க முடிந்தது.

ஒன்பது நாட்களும் பெருந்திரளான அன்பர்கள் வரவே, ஒவ்வொரு இடத்திலும் ஹால் நிரம்பி வழிந்தது.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அன்பர்கள் கூடி நாமகீர்த்தனத்தை கோஷமாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் சொல்லி ஆனந்தமும் பரவசமும் அடைந்தனர்.

தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர் நாமத்வார்களில் முறையே அந்தந்த நாட்களில் திவ்யநாம சங்கீர்த்தனம், அஷ்டபதி பஜனை, ராதாகல்யாண மஹோத்ஸவம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் கொண்டாட பெற்றது. ஒவ்வொரு நாமத்வார் அன்பர்களும் மிகவும் அழகாக ஒருங்கிணைந்து, நிகழ்ச்சிகள் அனைத்தையும் மிக நேர்த்தியாக நடக்க ஏற்பாடுகளையும் அன்பர்களுக்கு பிரசாதமும் வழங்கி இருந்தனர் என்பது, மிகவும் குறிப்பிட வேண்டிய ஒன்று.

இந்த தினங்களில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருகிருந்த பல திவ்யதேச, பாடல் பெற்ற தலங்களுக்கு சென்று ஸ்வாமி தரிசனமும் செய்து வந்தார்கள். விருதுநகரில் பதினான்காம் தேதியன்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் "தனசாமி-பரிமளாதேவி முதியோர் இல்லம்" சென்று அங்கிருந்த அன்பர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஆசீர்வாதம் அருளினார்கள்.

விருதுநகரில் சரியாக ராதாகல்யாணம் பூர்த்தியான சமயம், பட்டை வெயில் அடித்து கொண்டிருந்த வானம், திடீரென இருண்டது; அதிசயமாக கிடுகிடுவென இருட்டி கொண்டு வந்து மழை கொட்டு கொட்டென கொட்டி தீர்த்தது; விண்ணும், இது பகவானின் அருள்மழை என ஆர்ப்பரித்தாற் போல் இருந்தது!

பூர்த்திநாள் மாலை ஸ்ரீஸ்வாமிஜி, "விருது என்றால் Award என அர்த்தம். எல்லோரும் நாமம் சொன்னதை கேட்டு பகவான் மழை எனும் விருது தந்து, இது உண்மையில் விருதுநகர் என்று காண்பித்திருக்கிறான்" என்று சொன்னார்கள்.

**மார்ச் 3 பாண்டிச்சேரி** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீவிவேகானந்தா ரூரல் கம்யூனிட்டி கல்லூரியில் மஹாகவி பாரதி ஆடிட்டோரியம் ஹாலை திறந்து வைத்து, நிர்வாகத்தை மெச்சி, பயின்று வரும் மாணாக்கர்களுக்கு பிரசாதமும் அருளுரையும் வழங்கினார்கள்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## பக்தராஜ் ஸ்ரீமானஸிம்ஹஜி-4

பண்டித ராமக்ருஷ்ணதாஸ் பாபாவின் ஸமாதியிருக்கும் "பாகவத நிவாஸ்" எனுமிடத்தில் மானஸிம்ஹஜி ஸந்யாஸத்திற்கு முன், ராஜவேஷத்தில் இருக்கும் ஒரு புகைப்படத்தை, க்ருபாஸிந்துதாஸ் பாபா மாட்டி வைத்திருந்தார். இன்றும் அந்த புகைப்படம் அங்கு உள்ளது.

ஒருவர், க்ருபாஸிந்துதாஸ் பாபாவிடம், "பாபா! தாங்கள் மானஸிம்ஹ்ஜியுடைய ராஜவேஷத்தில் இருக்கும் இந்த புகைப்படத்தை, ஆஸ்ரமத்தில் ஏன் மாட்டி வைத்துள்ளீர்கள்? இந்த இடத்தில் அவரது த்யாகத்தை குறிக்கும் வண்ணம், அவர் ஸந்யாஸம் பெற்றபின் உள்ள புகைப்படமன்றோ இருக்க வேண்டும்?" என்று கேட்டார்.

பாபா, "இந்த சித்திரத்தினால் அவருடைய த்யாகம் எவ்வளவு தெரியுமோ, அவ்வளவு பாபாவாக அவர் இருக்கும் சித்திரத்திலிருந்து கூட தெரியாது. எத்தனையோ பாபாஜிக்கள் உள்ளனர். எல்லோரும் ஸம்ஸாரத்தை துறந்தவர்களே! ஆனால் எல்லா செல்வங்களும் மிகுதியாக இருந்தும் எல்லாவிதத்திலும் சௌக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பவர்களின் த்யாகம் தான் போற்றுதலுக்குரியது. இப்புகைப்படத்திலிருந்து மானஸிம்ஹின் அப்படிப்பட்டதான ஒரு த்யாகம் தெளிவாகிறது. அவர் ஏதோ துக்கத்தினாலோ அல்லது ஸம்ஸாரத்தில் ஏதோ ஒரு குறையினாலோ, இந்த த்யாகத்தை செய்யவில்லை. கணக்கிட முடியாத செல்வம், சொத்து, மனைவி, குழந்தை என்று எல்லாம் இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் புல் போல் மதித்து துறந்துவிட்டார்", என்று பதில் கூறினார்.

ஸந்யாஸம் பெற்றபின், அவர் பண்டித பாபாவின் ஆக்ஞையினால், ஸம்ஸ்க்ருதம் மற்றும் வங்காள மொழிகளைப் படித்தார். வங்காளத்தில் இருக்கும் கௌடீய க்ரந்தங்கள் மற்றும் வ்ரஜ பாஷையில் உள்ள, ரஸிக கவிகளின் காவியங்களை

அத்யயனம் செய்தார். ஸ்ரீப்ரியாசரண்பாபாஜி மஹாராஜ் போன்ற ரஸிகமான ஸந்துக்களுடன், ஸத்ஸங்கம் செய்வார். இதனால், அவருக்கு வ்ரஜத்தின் ரஸோபாஸனையான மஞ்சரீ பாவம் ஏற்பட்டது. அவருடைய மஞ்சரீ ரூபத்திற்கு, ''மதன் மஞ்சரீ'' என்று குருதேவர் பெயர் கொடுத்தார்.

வீட்டிலுள்ளோர்களுடன், இப்பொழுது, அவருக்கு முற்றிலும் சம்பந்தம் இல்லாமல் போயிற்று. ஆனால் தாயின் மீது மிகுந்த பக்தி கொண்டதால், அவருடன் மட்டும் சிறிது காலம் வரை தொடர்பு வைத்திருந்தார். அவரது தாயார் அவ்வப்பொழுது அவரை காண, ப்ருந்தாவனம் வருவார். ஸந்யாஸம் பெற்ற பின்பும், அவரது தாயின் வற்புறுத்தலால் இருமுறை லோர்டீ செல்லும்படி நேர்ந்தது. ஆனால் லோர்டீ சென்றாலும், அவர் வீட்டிற்கு செல்லாமல் தொலைவிலுள்ள ஒரு தோட்டத்திலேயே தங்குவார். பிக்ஷைக்கு மட்டும் அவர் தனது அன்னையிடம் செல்வார். ஸந்த்யாவேளைகளில் வீட்டிற்கு எதிரிலிருக்கும் ஒரு கோவிலில் ஸத்ஸங்கமும் கீர்த்தனமும் செய்வார். அவருடைய ஸங்கத்தினால், வீட்டிலுள்ளவர்களும் பக்தியின் ரஸத்தை அனுபவிக்கலானார்கள். அவர்களும் மாம்ஸம், மது போன்றவற்றை த்யாகம் செய்தார்கள். மானஸிம்ஹஜி தனது சகோதரர்களான, மதன்ஸிம்ஹ் மற்றும் நாராயணஸிம்ஹ் இருவரையும் க்ருபாஸிந்துதாஸ் பாபாவிடமிருந்து தீக்ஷை பெற வைத்து, கௌடீய ஸம்ப்ரதாயத்தில் ப்ரவேசிக்க செய்தார். அதே போல், தனது ஸஹோதரிகளை ராதாவல்லப ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீரூபலால் கோஸ்வாமியிடமிருந்து, தீக்ஷை பெற வைத்தார்.

சில நாட்களுக்குபின், பண்டித பாபா ஸித்தியடைந்துவிட்டார். மானஸிம்ஹ்ஜியினால் பாபாவின் விரஹத்தை தாங்க முடியவில்லை. ''ஹா பாபா! ஹா ராதே!'' என்று அல்லும் பகலும் அழுதுகொண்டே ஒரு உன்மாத அவஸ்தையில் இங்கும் அங்கும் அலைந்து கொண்டேயிருப்பார்.

(தொடரும்)

## சனாதனப்புதிர் பகுதி 72 - விடைகள் -ஆத்ரேயன்

1. தமயந்தி, லோபாமுத்ரா, சுகன்யா **(3.50.12, 3.94.19, 3.123.06, 3.122.10). ஹனுமார் 3.146.65).**
2. தமயந்தி, சாகுந்தலா, திரௌபதி, சாவித்ரி, கங்கா, கிரிகா இவர்களை **- 3.50, 1.65, 1.189, 3.277, 1.92, 1.57.**
3. அதற்குப் பிறக்கும் குட்டி நண்டுக்கள் **3.259.9 / 6.114.60** மஹாபாரதம்.
4. கமலா, பத்மா, புஷ்கரா, புண்டரீகா, உத்பலா, ராஜீவ, வனஜா, சதபத்ரா என்ற பெயர்களால்.
5. இந்திரன் **247** பகுதிகளில்; சிவன் **14**பகுதிகளில்.
6. லோபாமுத்ரா **3.94.24;** தமயந்தி **3.65.21.**
7. **92** இடங்களில்; கஜம், வாரணம், குஞ்சரம், மாதங்கம், நாகம், ஹஸ்தி.
8. திரௌபதியின் அழகுக்கு முன்னால், மற்ற பெண்கள் பெண் குரங்குகளை போல் தோற்றமளித்தார்கள் **3.251.3.**
9. தம்பதிகளின் தூய அன்பை வெளிப்படுத்த **6.8.9.**
10. ஜயத்ரதன் திரௌபதியை கவர்ந்து செல்லும் சமயம் - திரௌபதி ஜயத்ரதனை பார்த்து சொல்லுகிறாள்.


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# மாலே மணிவண்ணா - 138

—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



மக்கள் கொல்லாமையும் புலால் உண்ணாமையும் உடைய சாத்துவிகர்களாக இருக்கும் இடங்களிலே, வண்டுகள் தேன் உண்ண திரியும், தாமரை பூத்த ஓடைகளையும் கண்ணினை போல திரியும் மீன்களை உடைய ஓடைகளையும் கொண்டு, நிலமும் அழகாக இருக்கும் அல்லவா?

இவ்வாறு மரச்செறிவுள்ள மலைநிலத்திலிருந்து தாமரை பூத்த தடாகங்கள் உள்ள நிலத்துக்கு வந்தவர், வயல்வெளிகள் நிரம்பிய மருத நிலத்துக்கு தொடர்ந்து வருகிறார்.

ஒருசார் சாறுகொள் ஓதத்து இசையொடு மாறூற்று
உழவன் ஓதை பயின்று அறிவிழந்து
திரிநரும் ஆர்த்து நடுநரும் ஈண்டித்
திருநயத்தக்க வயல்

ஒருபக்கத்தில், திருமகளும் விரும்பத்தக்க வயல்கள் உள்ளன. அங்கே வெள்ளத்தின் ஓசைக்கு எதிராக உழவுக்குரிய காரியங்களை செய்வதால், உண்டாகிய ஆரவாரத்தை நிகழ்த்தும் உழவர்களும் ஆரவாரித்துக் கொண்டே நாற்று நடுபவர்களும் நெருங்கி இருக்கிறார்கள்.

செல்வம் பொலியும் இடத்தையும், உழைப்பு உள்ள இடத்தையும், திருமகள் விரும்புவாள். ஆதலின் உழவர் ஓசையும், நாற்று நடுவோர் ஓசையும் மிகுந்து, வெள்ளத்தின் ஓசைக்கு மாறுபட்டு ஒலிக்குமிடம் திருமகளுக்கு விருப்பமான இடம் ஆயிற்று.

"சாறுகொள் ஓதத்து இசை" என்பது வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் ஓசை என்று பொருள்படும். அப்படிப்பொருள் செய்யாமல், சாறு என்பதற்கு விழா என பொருள் கொண்டு, விழாக்கள் நடைபெறுவதால் உண்டாகும் பெருவெள்ளம் போன்ற ஒலியோடு, உழவர் ஓசை, போட்டி

இடுகிறது எனவும் உரைக்கலாம்.

உழவர் ஓசை, விழாவோசை இரண்டும் நிறைந்திருப்பது நாட்டுக்கும் நகருக்கும் சிறப்பாகும்.

*உழவர் ஓதை மதகு ஓதை உடைநீர் ஓதை தண்பதங்கொள்*
*விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி*

*(சிலப்ப - கானல்வரி - ஆற்றுவரி)*

என்னும் சிலப்பதிகாரக் கானல்வரி பாடல்களை ஒப்பிட்டு அறியலாம். ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் விவசாயம் மிக சிறப்பாக நடக்கும்: ஊரிலேயும் விழாக்கள் சிறப்பாக இருக்கும் என்பதை இப்பகுதி எடுத்து காட்டுகிறது.

நாட்டு சிறப்பை எடுத்து காட்டும்போது, நகர விழாச்சிறப்பையும் தொட்டுக்காட்டி விளக்கியவர் நகரின் உள்ளே நுழைந்து, நகரத்தின் சிறப்புகளை நமக்கு காட்டுகிறார்.

(தொடரும்)



75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | மார்ச் 31, ஏப்ரல் 15, 29 |
| மார்ச் 29 | அம்பத்தூர் GKஷெட்டி விவேகானந்தா வித்யாலயா மாலை |
| மார்ச் 30 | மஹாரண்யம் பள்ளி மாலை 5PM |
| ஏப்ரல் 8,9 | பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் - பிரதிஷ்டா தினம் |
| ஏப்ரல் 14 | 6-7PM ரஞ்சனி ஹால், 15வது தெரு நங்கநல்லூர் |
| ஏப்ரல் 14 | மதுரபுரி ஆஸ்ரமம் - ஜயஹனுமான் சன்னதி - லக்ஷ தீபம் |
| ஏப்ரல் 19 | குரோம்பேட்டை விபூதி பாபா கோவிலில் சத்சங்கம் |
| ஏப்ரல் 29 | வாலாஜாபேட்டை பெருமாள் கோவிலில் சத்சங்கம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**